தினமலர் சண்டே ஸ்பெஷல்
டிசம்பர் 4, 2011 இதழுடன் இணைப்பு



# காளியம்மனை பார்க்க கம்ப்யூட்டர்..!



ஸ்ரீ.வி.எம்.டி அட்டையை பயன்படுத்தும் பக்தர்கள்





இளையாழ்வார் சீனிவாசன்

தலைப்பை பார்த்தவுடன் 'இது ஏதோ புருடா மேட்டர்...' என்று எண்ணி விடாதீர்கள். பெட்டிக்கடையில் இருந்து வங்கிகள் வரை அனைத்திலுமே கம்ப்யூட்டர் பயன்பாடு வந்துவிட்ட இக்காலத்தில் கம்ப்யூட்டர் உதவியுடன் ஒரு கோயிலும் நவீனமயமாகி இருக்கிறது. ஆனால் அக்கோயில் அமைந்திருப்பது இங்கல்ல... புதுமை நகரான சிங்கப்பூரில்.

வெளிநாடுகளில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற இந்து கோயில்களில் குறிப்பிடத்தக்கது சிங்கப்பூரில் அமைந்துள்ள வீர மாகாளியம்மன் கோயில். சிராங்கூன் சாலையில் உள்ள இக்கோயில்தான் தற்போது முழுக்க முழுக்க கணினிமயமாக்கப்பட்டுள்ளது. இந்த புதுமையான முயற்சி பக்தர்களிடையே பெரும் வரவேற்பையும் பெற்றுள்ளது.

ஸ்ரீவி.எம்.டி என்று பெயரிடப்பட்டுள்ள இந்த கணிணியின் முக்கியப்பணி, பக்தர்கள் நீண்ட நேரம் வரிசையில் நிற்பதை குறைப்பது. ஸ்ரீவி.எம்.டி இயந்திரத்தில் பயன்படுத்தக்கூடிய சிறப்பு அட்டையை பணம் கட்டி பெற்றுக் கொண்டால், அதை பயன்படுத்தி அர்ச்சனை சீட்டு, தேங்காய், பூ, பழம் முதலிய அர்ச்சனை பொருட்களையும் பெறுவதோடு, அபிஷேகத்திற்கு முன்பதிவும் செய்து கொள்ளலாம். மேலும் ஒருவர் ஒருமுறை தன் மற்றும் குடும்பத்தாருடைய பெயர் மற்றும் நட்சத்திர விவரங்களை பதிவு செய்துவிட்டால், அடுத்து அவர் எப்போது அர்ச்சனை சீட்டு வாங்கினாலும் அதில் அத்தனை விவரங்களும் அச்சிடப்பட்டு இருக்கும்.

"இந்த கணினி இயந்திரம் பயன்பாட்டுக்கு வந்த பிறகு பக்தர்கள் தரிசனத்திற்கு காத்திருக்கும் நேரம் வெகுவாக குறைந்துள்ளது. ஒவ்வொரு வேலைக்கும் தனித்தனியே ஆட்களை நியமிக்க வேண்டிய அவசியமும் கோயில் நிர்வாகத்திற்கு இனி இல்லை. இந்த கணிணியின் மென்பொருள் கோயிலின் அன்றாட வரவு செலவுகள் அனைத்தையும் துல்லியமாக கவனித்துக் கொள்கிறது. பொருட்கள், அர்ச்சனை சீட்டுகள் விற்றது, கோயிலுக்கு வரும் நன்கொடைகள், உபய விவரங்கள் என அனைத்து விவரங்களையும் ஒரு விநாடியில் பெற்று விடலாம். இதனால் தனியாக கணக்கு வழக்குகளை பராமரிக்கத் தேவை இல்லை. அனைத்து வேலைகளையும் கணினியே செய்து விடுவதால் ஊழல் என்ற பேச்சுக்கும் இடமில்லை" என்று பெருமிதத்தோடு விளக்கம் சொல்லிய கோயில் அறங்காவலர் குழு உறுப்பினர் செல்வக்குமார் கொடுத்த இன்னொரு தகவல் ஆச்சரியம் தரக் கூடியது.

இந்த கணினி தொழில்நுட்பத்திற்கான மென்பொருளை வடிவமைத்தவர் ஒரு தமிழராம். தேனி மாவட்டம் எம்.சுப்புலாபுரத்தை பூர்விகமாக கொண்ட, இப்போது சிங்கப்பூர்வாசியாக இருக்கும் இளையாழ்வார் சீனிவாசன் தான் அந்தப் பெருமைக்கு சொந்தக்காரர். தொழிலதிபர், கணினி மென்பொருள் நிறுவன இயக்குனர் என பல பொறுப்புகளுடன் வலம் வரும் இவரது இந்த மென்பொருள் தொழில்நுட்பத்தை சிங்கப்பூரில் இருக்கும் பிற கோயில்களிலும் விரைவில் அறிமுகம் செய்யும் திட்டம் இருக்கிறதாம்.

"என் சொந்த ஊரான சுப்புலாபுரத்தில் உள்ள ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோயில் எனது மூதாதையர்களால் கட்டப்பட்டது. இப்போதும் அக்கோயிலின் திருப்பணிகளை ஊர் பொதுமக்களின் உதவியோடு சீரும் சிறப்புமாக நடத்தி வருகிறோம். சிறுவயதில் நானும் கோயில் பணிகளில் ஈடுபட்டவன் என்பதால் கோயிலில் பக்தர்களுக்கும், நிர்வாகத்தினருக்கும் என்ன தேவை என்பது எனக்கு நன்றாக தெரியும். அதை மனதில் வைத்துதான் இந்த தொழில்நுட்பத்தை உருவாக்கினேன். நான் பிறந்த மண்ணுக்கு செய்யும் சேவையாக தமிழக கோயில்களிலும் இத்தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்யும் ஆசை இருக்கிறது. வாய்ப்பு கிடைத்தால், அரசின் ஒத்துழைப்போடு தமிழக கோயில்களில் இந்த வசதியை ஏற்படுத்தித் தர தயாராக உள்ளேன்" என்று ஆர்வத்துடன் சொல்கிறார் இளையாழ்வார் சீனிவாசன்.



வீரமாகாளியம்மன் கோயில்.